பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 01 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்றலாம் என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வின் உத்தரவை வரவேற்பதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

**2)** பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 34 ஆயிரம் பேருந்துகள் வரும் 9-ஆம் தேதிமுதல் இயக்கப்பட உள்ளதாக மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

**3)** தமிழகத்தில் திமுக ஆட்சியில் ஊழல் நடைபெற்றுள்ளதாக ஆளுநரிடம் அஇஅதிமுக இன்று புகார் மனு அளித்துள்ளது.

**4)** மலேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செயதிகள் ---

<<<<<<<>>>>>

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தூணில் தீபம் ஏற்றுவதற்கு அனுமதி அளித்த தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு இன்று தீர்ப்பளித்தது.

தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு ஜெயச்சந்திரன், திரு கே கே ராமகிருஷ்ணன் ஆகியோர் கொண்ட அமர்வு, தீபத்தூண் அமைந்துள்ள இடம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமானது என்று கூறியுள்ளது.

இந்திய தொல்லியல் ஆய்வுத்துறையிடம் ஆலோசித்து, இந்த தீபத் தூணுக்கு செல்லும் நபர்களின் எண்ணிக்கையை முடிவு செய்யலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

<<<<<<<<>>>>>

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்றலாம் என்ற தனி நீதிபதியின் உத்தரவு செல்லும் என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இன்று பிறப்பித்துள்ள உத்தரவை வரவேற்பதாக மத்திய அமைச்சரும், பிஜேபி தமிழக தேர்தல் பொறுப்பாளருமான திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர். இந்த உத்தரவு மூலம் திருப்பரங்குன்றம் கோவில் பக்தர்களுக்கு நீதி கிடைத்துள்ளதாக கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு முறையீடு செய்தது, துரதிருஷ்டவசமானது என்று அவர் தெரிவித்தார்.

தமிழக முதலமைச்சரும், திமுக கட்சி தலைவர்களும் தொடர்ந்து சனாதன தர்மத்திற்கு எதிராக கருத்து தெரிவித்து வருவதாக திரு. பியூஷ் கோயல் குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் இந்த தீர்ப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கேரள மாநிலம் கோட்டயத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

***(Sound Byte — எல். முருகன் 45 Sec.)***

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன், திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தூணில் தீபம் ஏற்ற அனுமதி அளித்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை இரண்டு நீதிபதிகள் கொண்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வு உறுதி செய்திருப்பது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சொந்த ஊர் செல்லும் பொதுமக்கள் வசதிக்காக 34 ஆயிரம் பேருந்துகள் வரும் 9-ஆம் தேதிமுதல் இயக்கப்பட உள்ளதாக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பண்டிகை முடிந்தபின் தங்கள் பணியிடங்களுக்கு திரும்பும் மக்களின் வசதிக்காக வரும் 16-ஆம் தேதிமுதல், 19-ஆம் தேதிவரை 25 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து தினசரி இயக்கப்படும் 2 ஆயிரம் பேருந்துகளுடன், 10 ஆயிரம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சென்னை கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து, புதுச்சேரி, கடலூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகளும், வந்தவாசி, திருவண்ணாமலை, மார்க்கமாக செல்லும் பேருந்துகளும் இயக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கோயம்பேடு பேருந்து முனையத்திலிருந்து கிழக்கு கடற்கரை, பெங்களூரு, திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகளும், மாதவரம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொன்னேரி, ஊத்துக்கோட்டை வழியாக ஆந்திரா செல்லும் பேருந்துகளும் இயக்கப்படும் என்று அவர்கூறினார்.

மாதவரம் பேருந்து நிலையத்தில் இருந்து திருச்சி, சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை ஆகிய ஊர்களுக்கு வழக்கமான பேருந்துகளும் இயக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இயக்கப்படும் அனைத்து பேருந்துகளுக்கும் இணையதளம் மூலமாகவும், வாட்ஸ் அப் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து கார் மற்றும் இதர வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு செல்வோர் தாம்பரம், பெருங்களத்தூர் வழியை தவிர்த்து திருப்போரூர், கேளம்பாக்கம், செங்கல்பட்டு, வண்டலூர் வெளிச்சுற்று

சாலை வழியாக செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் ஊழல் நடைபெற்றுள்ளதாக ஆளுநர் திரு. ஆர்.என். ரவியிடம், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மனு அளித்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு எடப்பாடி பழனிசாமி, இது குறித்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார்.

கடந்த 2021-ஆம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்றது முதல் நடைபெற்ற ஊழல் குறித்த விவரங்களை துறை வாரியாக ஆளுநரிடம் சமர்ப்பித்ததாக கூறினார்.

இந்த ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் முழுமையான ஆதாரங்கள் இருப்பதால், இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆளுநரிடம் வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

பல லட்சம் கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதால் தமிழகத்தை பெரும் கடன் சுமையில் திமுக அரசு தள்ளியிருப்பதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

**29-**ஆவது தேசிய இளையோர் திருவிழாவையொட்டி நடைபெறவுள்ள வளர்ச்சியடைந்த இந்தியா குறித்த இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தமிழகத்தை சேர்ந்த **82** இளையோர் பங்கேற்க உள்ளதாக மை பாரத் அமைப்பின் தமிழ்நாடு புதுச்சேரி இயக்குனர் திரு செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த உரையாடலில் பங்கேற்கும் இளையோர், இன்று சென்னை மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு ஆர் என் ரவியை சந்தித்து வாழ்த்து பெற்றதாகவும் அவர் கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய விரும்புவோர் இம்மாதம் **18-**ஆம் தேதிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **18** வயது நிரம்பியவர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், முகவரி மாற்றம், பதிவெண் திருத்தம், புகைப்பட அடையாள அட்டையில் மாற்றம், மாற்றுத்திறனாளி வாக்காளர் என குறிப்பிடுதல்

போன்றவற்றிற்கு உரிய படிவங்களை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கிடங்கில், முதல் நிலை சரிபார்ப்பு பணிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தின் 26-ஆவது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக திருமதி G S அனிதா இன்று பொறுப்பெற்றுக்கொண்டார்.

------------------

மதுரையில் தேசிய சணல் வாரியத்தின் Jute Mark இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

-----------------

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் தனியார் பல்கலைக்கழகத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மூவர்ண

நிறங்களில் ஆடைகளை அணிந்து வந்தே மாதரம் என்ற வாசகத்தை மனித வடிவமாக உருவாக்கிய உலக சாதனை முயற்சி நடைபெற்றது.

-------------

திருப்பத்தூர் தலைமை அரசு மருத்துவமனையில் 9-ஆவது தேசிய சித்த மருத்துவ தினத்தை முன்னிட்டு, அகத்தியர் சிலை திறப்பு விழா இன்று நடைபெற்றது.

-----------------

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் வனத்துறையினர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் நிர்வாக காரணங்களுக்காக பேரிஜம் ஏரிக்கு செல்ல நாளை தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------

திருக்குறள் வாரத்தினை முன்னிட்டு, திருக்குறள் மற்றும் பழந்தமிழ் இலக்கியங்களை மையமாக கொண்ட இசை நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் வரும் 11-ஆம் தேதி மாலை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மலேசியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-17 என்ற செட் கணக்கில், மலேசியாவின் Zii Jia Lee -ஐ வென்றார்.

-----------------

விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், தமிழகம் 54 ரன் வித்தியாசத்தில், திரிபுரா அணியை வென்றுள்ளது.

அகமதாபாதில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த தமிழக அணி, 50 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு, 259 ரன் எடுத்தது.

260 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய திரிபுரா அணி, 42 புள்ளி நான்கு ஓவரில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 205 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

<<<<<<<END>>>>>